RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 147 | ஜுன்.4 2026 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுக்க நடவடிக்கை: டிஜிபி மகேஷ்குமார் அகர்வால் உறுதி

சென்னை: ஜூன்.4-

தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு டிஜிபியாக பொறுப்பேற்றார் மகேஷ் குமார் அகர்வால். பின்னர், அவர், ''போதைப் பொருட்கள் கட்டுப்பாடு, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்க இருக்கின்றோம்'' என தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தவெக தனிப் பெருங்கட்சியாக உருவெடுத்த நிலையில், தற்போது கூட்டணி ஆட்சிதான் நடந்து வருகிறது. புதிய ஆட்சி அமையும் முன்னர் தேர்தலை ஒட்டி தேர்தல் ஆணையம் தமிழக டிஜிபி, தலைமைச் செயலர் உள்ளிட்ட பல்வேறு முக்கியப் பொறுப்புகளில் இருந்த அதிகாரிகளை மாற்றம் செய்தது.

இந்நிலையில், தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு டிஜிபியாக மகேஷ் குமார் அகர்வால் நியமிக்கப்பட்டார். அவர் இன்று தமிழக டிஜிபியாக பொறுப்பேற்றார். அவருக்கு பூங்கொத்து கொடுத்து, காவல் துறை அதிகாரிகள் வாழ்த்து தெரிவித்தனர்.

முன்னதாக, சட்டம் ஒழுங்கு டிஜிபியாக தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட சந்தீப் ராய் ரத்தோர், சிறைத் துறை டிஜிபியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழக சட்டம் ஒழுங்கு டிஜிபியாக பொறுப்பேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் மகேஷ்குமார் அகர்வால் கூறும்போது, “தமிழக மக்களுக்கு சேவை செய்ய வாய்ப்பு கிடைத்தது மகிழ்ச்சி. முதல்வர் விஜய் மற்றும் தமிழக மக்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.



தமிழகத்தில் போதைப் பொருட்கள் கட்டுப்பாடு, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்க இருக்கின்றோம். தமிழக காவல் துறைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மக்களை கேட்டுக் கொள்கிறேன்'' என்று தெரிவித்தார்.

யார் இந்த மகேஷ்குமார் அகர்வால்?

கடந்த 1994ம் ஆண்டு தமிழக பேட்ச் ஐபிஎஸ் அதிகாரியான மகேஷ்குமார் அகர்வால் பஞ்சாப் மாநிலம் பதிந்தா பகுதியைச் சேர்ந்தவர். சட்டம் பயின்றவர். 22 வயதிலேயே ஐபிஎஸ் அதிகாரியானார். தமிழ், இந்தி, ஆங்கிலம், பஞ்சாப் மொழியில் சரளமாக பேசக்கூடியவர். தேனி, தூத்துக்குடி மாவட்டங்களின் எஸ்.பி., சென்னை பூக்கடை துணை ஆணையர், சென்னை போக்குவரத்து காவல் தெற்கு துணை ஆணையர் எனப் பொறுப்பு வகித்தார்.

பின்னர் 7 ஆண்டுகள் சிபிஐ அதிகாரியாக பஞ்சாப், ஹரியானா, ஜம்மு காஷ்மீரில் பணியாற்றினார். தொடர்ந்து ஐஜியாகப் பதவி உயர்வுபெற்று தமிழகம் திரும்பி சிபிசிஐடி ஐஜியாகப் பதவி வகித்தார். மேலும் அவர் மதுரை காவல் ஆணையரானார். மீண்டும் சிபிசிஐடி ஐஜி ஆனார். பின்னர் சென்னை தெற்கு கூடுதல் ஆணையராகப் பொறுப்பேற்றார்.

தொடர்ந்து செயலாக்கப் பிரிவு ஏடிஜிபியாக இருந்த மகேஷ்குமார் 2020ம் ஆண்டு சென்னை காவல் ஆணையராக பொறுப்பேற்றார். பின்னர் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு சிஜடி கூடுதல் டிஜிபியாக இருந்தார். அதன் பின்னர் அயல்பணியாக டெல்லி சென்ற அவர், தற்போது தமிழக டிஜிபியாக நியமிக்கப்பட்டுள்ளார். சிறந்த பணிக்கான குடியரசுத் தலைவர் பதக்கத்தையும், பொது சேவையில் சிறந்து விளங்கியதற்காக முதல்வர் பதக்கத்தையும் வென்ற இவர் சிபிஐ, சிபிசிஐடி உள்ளிட்ட புலனாய்வு அமைப்புகளிலும் திறம்பட செயலாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## “அதிமுக அலுவலக சாவி பெருந்தன்மையுடன் ஒப்படைக்கப்பட்டுள்ளது” விஜயபாஸ்கர்

புதுக்கோட்டை: ஜூன்.4-

பரபரப்பான செய்திகள் எதுவும் இல்லை. அதிமுக மாவட்ட அலுவலக சாவியை பெருந்தன்மையுடன் ஒப்படைத்துள்ளோம் என அதிமுக எம்எல்ஏ சி.விஜயபாஸ்கர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, “பத்திரிக்கையின் பரபரப்புக்கும், ஊகங்களுக்கும் என்னால் எந்த செய்தியையும் சொல்ல முடியாது. அப்படி எந்த செய்தியும் இல்லை. நான் விராலிமலை சட்டப்பேரவைத் தொகுதியில் வாக்களித்த மக்களுக்கு நன்றி சொல்ல சென்றிருந்தேன். அப்போது ஒன்றிய கழகச் செயலாளர்கள், மாநில கட்சியின்



பொறுப்பாளர்களும் வழக்கம் போல என்னை சந்திக்க வந்தனர். அவர்களும் சில கருத்துக்களை முன்வைத்தனர். இது ஆலோசனை இல்லை.

விஜய பாஸ்கர் எனும் நான் 26 வயதில் இளம் சட்டமன்ற உறுப்பினர் ஆனேன். 2001ல் சட்டமன்ற உறுப்பினராகி, ஐந்து முறை தேர்தலில் நின்று, ஐந்து முறையும் மகத்தான வெற்றி பெற்றுள்ளேன். இம்முறை 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளேன். அதிமுக மாவட்ட அலுவலக சாவியை பெருந்தன்மையுடன் ஒப்படைத்துள்ளோம்.

5 நாட்களுக்கு பிறகு புதுக்கோட்டைக்கு வரும்போது, அனைவரும் ஆவலுடன் என்னை பார்க்க வருகிறார்கள். புதுக்கோட்டையின் வளர்ச்சிக்கு பல வகையில் துணை நின்றுள்ளேன்'' இவ்வாறு அவர் கூறினார்.

## “ஆட்சி நிர்வாகம், மாநில உரிமைகளில் பங்களிப்பு...” கருணாநிதி பிறந்தநாளில் முதல்வர் விஜய் புகழாரம்

சென்னை: ஜூன்.4-

முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 103வது பிறந்தநாளை ஒட்டி தமிழக முதல்வர் விஜய், “தமிழ் மொழி, இலக்கியம், திரைத்துறை, அரசியல், ஆட்சி நிர்வாகம் மற்றும் மாநில உரிமைகள் போன்றவற்றில் முன்னாள் முதல்வர் கருணாதியின் பங்களிப்பை நினைவுகூர்கிறேன்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பிறந்த நாளையொட்டி அரசியல் தலைவர்கள் பலரும் அவரை நினைவு கூர்ந்து, புகழஞ்சலி செலுத்தி வருகின்றனர்.




அந்த வகையில், இது தொடர்பாக முதல்வர் விஜய் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், “ முன்னாள் முதல்வர் மு. கருணாநிதியின் 103 வது பிறந்தநாளில், தமிழ் மொழி, இலக்கியம், திரைத்துறை, அரசியல், ஆட்சி நிர்வாகம் மற்றும் மாநில உரிமைகள் போன்றவற்றில் அவரது பங்களிப்பை நினைவுகூர்கிறேன்.

அவருடைய பிறந்த நாளில் எனது மரியாதை கலந்த வணக்கங்களைச் சமர்ப்பிக்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

**present sale for all over Tamil Nadu**

**தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது**

## துரதிருஷ்டவசமா..? துரை வைகோ கருத்தால் துடி துடிக்கும் திமுக

சென்னை, ஜூன்.4-

“சட்டப்பேரவைத் தேர்தலில் மதிமுக வேட்பாளர்கள் துரதிருஷ்டவசமாக திமுக சின்னத்தில் போட்டியிட்டனர். அதனால் தவெக அரசுக்கு ஆதரவு கொடுக்க முடியவில்லை'' மதிமுக முதன்மைச் செயலாளர் துரை வைகோவின் இந்தக் கருத்தால் திமுக முகாம் தகித்துக் கொண்டிருக்கிறது.

தனது வீட்டுக்கு வந்த முதல்வர் விஜய்யை வைகோ வரவேற்று வழியனுப்பிய உற்சாகத்தைப் பார்த்ததுமே இவர் இனி நம் பக்கம் தங்கமாட்டார் என்ற முடிவுக்கு வந்துவிட்ட திமுக, அதற்காக கவலைப்படவும் இல்லை. ஆனால், துரை வைகோ இப்போது உதிர்த்திருக்கும் ‘துரதிருஷ்டவசமாக’ என்ற வார்த்தை அறிவாலயத்து மக்களை துடிக்கவைத்துக் கொண்டிருக்கிறது.

இது தொடர்பாக நம்மிடம் பேசிய திமுகவின் மூத்த முன்னாள் அமைச்சர் ஒருவர் “எங்களுடைய தலைவர் தோற்றாலும் மதிமுகவினரை உதயசூரியனில் நிற்கவைத்து துரதிருஷ்டவசமாக ஜெயிக்க வைத்துவிட்டோமே என நாங்கள் தான் இப்போது மறுகிக் கொண்டிருக்கிறோம். 2024 மக்களவைத் தேர்தலில் திருநாவுக்கரசருக்காக திருச்சி தொகுதியை பிடிவாதமாகக் கேட்டது காங்கிரஸ்.

அப்போது, மும்பை இண்டியா கூட்டணி கூட்டத்தில் இருந்த ராகுலிடம் நேரடியாகவே பேசி திருச்சியை மதிமுகவுக்காக பெற்றுக் கொடுத்தவர் எங்கள் தலைவர் ஸ்டாலின். அப்போதே, ‘உயிரே போனாலும் தனி சின்னத்தில் தான் போட்டியிடுவேன்’ என்று சொன்னார் வைகோவின் மகன் துரை.

அதை மனதில் வைத்துக் கொண்டு திமுகவினர் சுணங்கிவிடக் கூடாதே என



கவலைப்பட்ட ஸ்டாலின், ‘துரையை ஜெயிக்க வெச்சுட்டுத்தான் நீங்க சென்னைக்கு வரணும்’ என கே.என்.நேருவிடம் சொன்னார். அதற்குத்தான் இப்போது தனது விசுவாசத்தைக் காட்டி இருக்கிறார் அந்தத் தம்பி. துரதிருஷ்டவசமாக சூரியனில் நின்றதால் 2 இடத்திலாவது ஜெயித்தார்கள். அதிர்ஷ்டவசமாக அவர்கள் விரும்பிய சின்னத்தில் நின்றிருந்தால் அட்ரஸே இல்லாமல் போயிருப்பார்கள்.

அப்பாவுக்கும் பிள்ளைக்கும் என்றைக்குமே திமுகவை பிடிக்காது... அதிலும் குறிப்பாக, ஸ்டாலினைப் பிடிக்கவே பிடிக்காது என்பது எங்களுக்கும் தெரியாமல் இல்லை. மக்கள் நலக் கூட்டணியை எடுத்து மூடிய பிறகு, ‘போக்கிடமில்லாமல் நிற்கிறோம்’ என்று தான் திமுகவிடம் வந்தார் வைகோ. ‘எந்த நிபந்தனையும் இல்லாமல் வருகிறோம். எங்களை ஏற்றுக் கொள்ளுங்கள்’ என்று ஸ்டாலினிடம் சொன்னவர், ‘உங்கக்கிட்டயே வந்துட்டேன்பா; என்னை ஏத்துக்கோங்க’ என்று அப்போது பேராசிரியரிடம் சொன்னதையும் இப்போது மறந்திருக்கலாம்.

மல்லை சத்யா, திருப்பூர் துரைசாமி, புலவர் செவந்தியப்பன் உள்ளிட்ட மதிமுகவின் முக்கிய நிர்வாகிகள் 16 பேர் திமுகவில் இணைய முன்வந்தபோது, ‘அண்ணன் வைகோ வருத்தப்படுவார்’ என்று சொல்லி அதை தவிர்த்தவர் ஸ்டாலின். திமுக ஆட்சியில் தனக்கு வேண்டப்பட்டவர்களுக்கு எந்த நல்லதுமே நடக்கவில்லை என்று வைகோவால் நெஞ்சில் கைவைத்துச் சொல்லமுடியுமா? ‘ஸ்டாலினுக்கு இறுதிவரை பக்கபலமாக இருப்பேன்’ என கருணாநிதிக்கு வைகோ கொடுத்த சத்தியவாக்கு இப்போது என்னாயிற்று? அதை மறந்துவிட்டதால் தான், ‘மதிமுக எம்எல்ஏவான கம்பம் ராமகிருஷ்ணனை திமுகவில் சேர்த்தபோது குதிரை பேரம் நடக்கவில்லையா?’ என்று கேட்கிறாரா?

இவர்களுக்கு என்றைக்குமே அதிர்ஷ்டக் காற்று இருந்ததில்லை. இவர்களை அதிர்ஷ்டக்காரர்கள் ஆக்கியதே திமுக தான். 30 ஆண்டுகள் 3 மாதங்கள் எம்.பியாக இருந்திருக்கிறார் வைகோ. இதில் 29 ஆண்டுகள் அவர் திமுக எம்.பியாகத்தான் இருந்திருக்கிறார். இப்போது அவரது மகனும் திமுக தயவில் தான் எம்.பியாக இருக்கிறார். அப்படி எல்லாம் தங்களை அங்கீகரித்த கட்சிக்கே இவர்கள் விசுவாசமாக இல்லாதபோது வேறு யாருக்கு விசுவாசமாக இருக்கப் போகிறார்கள்?

பொதுக்குழு என்ற பெயரில், அப்பாவும் பிள்ளையும் எழுதி வைத்திருக்கும் முடிவை நிர்வாகிகள் நெற்றியில் ஒட்டப் போகிறார்கள். அதற்காக, ஆங்காங்கே மிஞ்சி இருக்கும் மதிமுகவினரை அவர்கள் இப்போதே பேட்டிகள் மூலம் தயார்படுத்தி வருகிறார்கள்.

தானாக நடப்பதை எல்லாம் தன்னால் நடந்ததாகச் சொல்லிக் கொள்ளும் வைகோ, திமுகவின் வெற்றியில் தனக்கும் பங்கிருப்பதாக ஏதோ சிருஷ்டி கர்த்தா போல் இப்போது சொல்கிறார். மதிமுக வேட்பாளர்களின் தேர்தல் செலவுக்காக திமுக எவ்வளவெல்லாம் ‘கொடுத்தது’ என்பதையும் அவர் ‘எண்ணிப்’ பார்க்க வேண்டும். அரசியலில் யாரும் இங்கே தன்னார்வ தொண்டு நிறுவனம் நடத்தவில்லை; கட்சிகள் தான் நடத்துகிறார்கள். எனவே, அவரவருக்கும் அரிதான வாய்ப்புகள் வரும்போது அதைப் பயன்படுத்தவே நினைப்பார்கள்.

அந்த வகையில், விஜய் தனது வீட்டுக்கு வந்த போது, தானே விஜய்யை முதல்வராக்கியது போல் அவரை வரவேற்று அகமகிழ்ந் வைகோ, தனக்குத் தேவையானதைப் பெற்றுக் கொண்டு தாராளமாக தவெக அரசுக்கு ஆதரவளிக்கட்டும்; யாரும் அதை கேள்வி கேட்கப் போவதில்லை. அதை விடுத்து, திமுகவினரின் உழைப்பை உதாசீனப்படுத்த வேண்டாம் என்பதுதான் அப்பாவுக்கும் பிள்ளைக்கும் நாங்கள் கொடுக்கும் அட்வைஸ்'' என்றார்.

வைகோ தங்களுக்கு குட்பை சொல்கிறார் என்பதைவிட, திமுகவை ‘தீயசக்தி’ என்று தூற்றிக் கொண்டிருக்கும் விஜய்யின் பக்கம் சாய்கிறாரே என்பது தான் திமுகவினரை ரொம்பவே தகிக்க வைத்திருக்கிறது.

## வேட்புமனுவில் சொத்து விவரங்களை மறைத்ததாக புகார் : பழனிசாமிக்கு எதிரான வழக்கு தள்ளுபடி

சென்னை: ஜூன்.4-

அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, வேட்பு மனுவில் சொத்து, வருமான விவரங்களை மறைத்தது குறித்து விசாரணை நடத்த வருமான வரித்துறைக்கு உத்தரவிடக் கோரிய வழக்கை தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் எடப்பாடி தொகுதியில் போட்டியிட்ட அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, வெற்றி பெற்று, எம்எல்ஏவாக பதவியேற்றுள்ளார். இந்நிலையில், அவர் தாக்கல் செய்த வேட்பு மனுவில், சொத்து, வருமான விவரங்களை எடப்பாடி பழனிசாமி மறைத்துள்ளதாகக் கூறி, தொகுதி வாக்காளர் சக்திவேல் பெருமாள் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில், எடப்பாடி பழனிசாமி தனது வேட்பு மனுவில் சொத்துக்கள் குறித்து முழுமையான விவரங்களை தெரிவிக்கவில்லை என்றும், 2021, 2026ம் ஆண்டுகளில் எடப்பாடி பழனிசாமி தாக்கல் செய்த வேட்பு மனுக்களை ஒப்பிட்டால், ஏராளமான வேறுபாடுகள் உள்ளன. உண்மைத் தகவல்கள் மறைக்கப் பட்டுள்ளன. இது குறித்து விசாரணை நடத்த வருமான வரித்துறைக்கு உத்தரவிட வேண்டும் என கோரிக்கை வைத்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி மற்றும் நீதிபதி அருள் முருகன் அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது வருமானவரித் துறை சார்பில் ஆஜரான வழக்கறிஞர், ஏற்கனவே இதேபோல வழக்குகளில் விரிவான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த வழக்கு விசாரணைக்கு உகந்தது அல்ல. தேர்தல் வழக்கு தான் தொடர முடியும் என தெரிவித்தார்.

இதனை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், எடப்பாடி பழனிசாமிக்கு எதிரான வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.



## ஊத்துக்கோட்டையில் 1435 பசலி வருவாய்தீர்வாயம் ஜமாபந்தி தொடங்கியது

திருவள்ளூர், ஜூன்.4-
திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில்1435 பசலி தீர்வாயம் 2026ம் ஆண்டு ஜமாபந்தி ஜமாபதி துவங்கியது இந்த ஜமாபந்திக்கு மாவட்ட ஆட்சியர் கவிதா மற்றும் சட்டமன்ற உறுப்பினர் விஜயகுமார் கலந்துகொண்டு புதிதாக கட்டப்படும் வணிக வளாகத்தை ஆய்வுசெய்து பொது மக்களின் மனுக்களை பெற்றார் வட்டாட்சியர் ராஜேஷ்குமார், பேரூராட்சி செயல்அலுவலர் றி.சதீஷ், த.வெ.க பேரூர்செயலாளர் பிரசாந்த், இணை செயலாளர் ராஜேஷ், வழக்கறிஞர் ராமமூர்த்தி, துணை செயலாளர் தமிழரசன், பொருலாளர் பாலாஜி, நினைவு பரிசுவழங்கி வரவேற்றனர் ஊத்துக்கோட்டை பகுதிக்கு உட்பட்ட கிராம பொதுமக்கள் மனுக்களை அளித்தனர்



## தேனி மாவட்ட காவல்துறையினருக்கு நவீன வாக்கி டாக்கிகள் வழங்கிய காவல் கண்காணிப்பாளர்

தேனி, ஜீன்.4-
தேனி மாவட்ட காவல்துறையின் தகவல் தொடர்பு மற்றும் கண்காணிப்பு பணிகளை மேலும் மேம்படுத்தும் நோக்கில், நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய வாக்கி டாக்கிகளை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஞிகூஷீ.ஙி.சினேஹாப்ரியா காவல்துறையினருக்கு வழங்கினார். இந்த நவீன வாக்கி டாக்கிகள் மூலம் காவல்துறை யினருக்கிடையேயான தகவல் பரிமாற்றம் விரைவாகவும் துல்லியமாகவும் நடைபெறுவதுடன், அவசர கால சூழ்நிலைகளில் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவும், சட்டம்ஒழுங்கு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு பணிகளை திறம்பட மேற்கொள்ளவும் உதவியாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டது.



## மொண்டியம்மன் நகர் பஜாரில் பொதுமக்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கல்

மாதவரம், ஜூன்.4-
மாதவரம் தொகுதி மொண்டியம்மன் நகர் பஜாரில் முன்னாள் தமிழ்நாடு மறைந்த முதல்வர் டாக்டர் மு.கருணாநிதியின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.சுதர்சனம் ஆலோசனைப்படி சோழவரம் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளரும் முன்னாள் சோழவரம் ஒன்றிய குழு துணைப் பெருந்தலைவருமான மீ.வே.கருணாகரன் தலைமை தாங்கி அன்னாரின் திருஉருவ படத்திற்கு மலர்கள் தூவி மரியாதை செலுத்தினர். பின்னர் சுமார் 500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அறுசுவை அன்னதானம் மற்றும் இனிப்புகளை வழங்கினர். இதில் சோழவரம் தெற்கு ஒன்றிய திமுக அவைத்தலைவர் காசிம்முகம்மது உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய,ஊராட்சி நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்



■ தமிழக விவசாயிகள் சங்கத்தின் சார்பாக, தமிழக அரசு விவசாயிகளின் அனைத்து கடன்களையும் தள்ளுபடி செய்ய வலியுறுத்தி, கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகே இந்திய மஞ்சள் விவசாய சங்கம் தேசிய செயலாளர், விவசாய சங்க மாநில தலைவர் ராம கவுண்டர் அவர்கள் தலைமையில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## குன்னூரில் மார்க்கெட் வியாபாரிகள் கடை அடைப்பு போராட்டத்தை வாபஸ் பெற்றனர்





குன்னூர், ஜூன்.4-
நீலகிரி மாவட்டம் குன்னூர் மார்க்கெட் பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான 800க்கும் மேற்பட்ட கடைகள் உள்ளது மிகவும் பழமை வாய்ந்த கடைகளை இடித்துவிட்டு புதியதாக நவீன முறையில் பார்க்கிங் வசதி கூடிய கடைகள் கட்டுவதற்கு அரசு சார்பில் ரூ. 41.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான டெண்டரும் விடப்பட்டு பூமி பூஜையும் நடந்த நிலையில், வியாபாரிகள் சார்பில் இந்த திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நீதிமன்றத்திற்கு சென்றனர் இதனை விசாரித்த நீதிமன்றம் வியாபாரிகளின் மனுவை தள்ளுபடி செய்து நகராட்சி சார்பில் புதியதாக கடைகள் கட்டும் பணிக்கு அனுமதி வழங்கியது. இதனை தொடர்ந்து இறுதி கட்டமாக கடந்த 30ம் தேதி முதல் கட்டமாக 247 கடைகளை காலி செய்யுமாறு நகராட்சி அதிகாரிகள் ஒரு வார காலம் அவகாசம் கொடுத்து வியாபாரிகளுக்கு நோட்டீஸ்கள் வழங்கினர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த 1ம் தேதி மாலை 5 மணி முதல் 2ம்தேதி வரை அனைத்து கடைகளிலும் அடைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்நிலையில் குன்னூர் நகராட்சி அலுவலக வளாகத்தில் நகராட்சி ஆணையர் கிருஷ்ணா ராம் மற்றும் குன்னூர் டிஎஸ்பி ரவி, வட்டாட்சியர் செந்தில்குமார் ஆகியோர் தலைமையில், நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் நூற்றுக்கணக்கான வியாபாரிகள் கலந்து கொண்டு கடைகளை இடித்து புதியதாக கட்டும் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்தினர். இதற்கு பதில் அளித்த அதிகாரிகள் சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு காரணமாக மூடப்பட்ட கடைகளை உடனடியாக வியாபாரிகள் திறக்க வேண்டும், வியாபாரிகளின் நியாயமான கோரிக்கைகளை அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டு அதன் பேரில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், ஏற்கனவே நீதிமன்ற உத்தரவின் பேர் வழங்கப்பட்ட நோட்டீஸ்கள் மீது நடவடிக்கை தொடரும் என தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து அனைத்து கடைகளும் திறக்கப்பட்டது. நகராட்சி கடை விவகாரம் அவ்வப்போது விஸ்வரூபம் எடுத்து வருவதால் பொதுமக்கள் செய்வதறியாமல் திகைத்து போய் உள்ளனர்.

## பெற்ற மகளுக்கே பாலியல் தொல்லை: தாய் அளித்த புகாரில் தந்தை போக்சோ சட்டத்தில் கைது திருத்தணியில் அதிர்ச்சி சம்பவம்




திருவள்ளூர், ஜூன்.4-
திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி அருகே 11 வயது சிறுமிக்கு அவரது சொந்த தந்தையே பாலியல் தொல்லை அளித்த சம்பவம் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சொந்த வீட்டிலேயே பெண் குழந்தைகளின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி உள்ளதை இந்தச் சம்பவம் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளது.

திருத்தணி அருகே உள்ள அரசுப் பள்ளியில் ஆறாம் வகுப்பு பயின்று வரும் 11 வயது சிறுமிக்கு, கூலித் தொழிலாளியான அவரது தந்தை அண்ணாமலை (36) என்பவர் மதுபோதையில் பாலியல் தொல்லை கொடுத்து வந்துள்ளார். இந்த கொடூரச் செயலை அறிந்த சிறுமியின் தாய், உடனடியாக திருத்தணி அனைத்து மகளிர் காவல் நிலையத்தை அணுகி தனது கணவர் மீது புகார் அளித்தார்.இந்த புகாரின் அடிப்படையில், திருத்தணி அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் மலர் அவர்கள் தீவிர விசாரணை மேற்கொண்டார். காவல்துறை யினரின் விசாரணையில் அண்ணாமலை தனது மகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்தது உறுதி செய்யப்பட்டது. இதனையடுத்து, அவர் மீது போக்சோ (POC-SO) சட்டத்தின் கீழ் காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்து அவரைக் கைது செய்தனர்.கைது செய்யப்பட்ட அண்ணாமலைக்கு திருத்தணி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் மருத்துவப் பரிசோதனை நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, அவர் திருவள்ளூர் மாவட்ட மகளிர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். வழக்கை விசாரித்த நீதிபதியின் உத்தரவின் பேரில், குற்றவாளி அண்ணாமலையை காவல்துறையினர் புழல் சிறையில் அடைத்தனர். பெற்ற மகளுக்கே தந்தை பாலியல் தொல்லை கொடுத்த இந்தச் சம்பவம், அப்பகுதி மக்களிடையே பெரும் பரபரப்பையும், பெண் குழந்தைகளின் பாதுகாப்பு குறித்த ஆழ்ந்த கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.



■ தேனி மாவட்ட காவல்துறையில் சிறப்பாக பணியாற்றி பணி நிறைவு பெற்ற காவல்துறையினருக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.B.சினேஹாப்ரியா வாழ்த்துகளை தெரிவித்தார்இந்நிகழ்வில், நீண்ட காலமாக காவல்துறையில் நேர்மை, ஒழுக்கம் மற்றும் அர்ப்பணிப்புடன் பணியாற்றி ஓய்வு பெறும் காவல்துறையினரின் சேவையை பாராட்டி, அவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது.மேலும், ஓய்வு பெறும் காவல்துறையினரின் எதிர்கால வாழ்க்கை சிறப்பாக அமைய வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டதுடன், அவர்கள் காவல்துறைக்கு வழங்கிய அர்ப்பணிப்பான சேவை நினைவுகூரப்பட்டது.இந்நிகழ்ச்சியில் காவல் அதிகாரிகள் மற்றும் ஓய்வு பெறும் காவல்துறையினரின் குடும்பத்தினர்கள் கலந்து கொண்டனர்.



## கிருஷ்ணகிரி அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு: வெள்ள அபாய எச்சரிக்கை நீடிப்பு

கிருஷ்ணகிரி, ஜூன்.4-
கிருஷ்ணகிரி அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 760 கனஅடியில் இருந்து 967 கனஅடியாக அதிகரித்துள்ளது. அணையின் நீர்மட்டம் 50.20 அடியாக உள்ள நிலையில், 786 கனஅடி தண்ணீர் ஆறு மற்றும் பாசன கால்வாய்களுக்கு திறந்துவிடப்பட்டுள்ளது. இதனால் கரையோர மக்களுக்கு விடுக்கப்பட்ட வெள்ள அபாய எச்சரிக்கை தொடர்ந்து நீடிக்கிறது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மிதமான மழை பதிவாகியுள்ளதால் அணைகள் மற்றும் ஏரிகளுக்கு நீர்வரத்து உயர்ந்துள்ளது.



■ நீலகிரி மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு குன்னூர் எடப்பள்ளி பகுதியில் திமுக செயற்குழு உறுப்பினர் காளிதாஸ் அவர்கள் கலைஞர் திருவுருவ படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.பிறகு பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்

## தேனி மாவட்டம்கோடை விடுமுறை முடிந்து பள்ளிகள் திறக்கப்பட உள்ளதை முன்னிட்டு,பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன்,நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்



தேனி, ஜூன்.4-
தேனி மாவட்டம், கோடை விடுமுறை முடிந்து பள்ளிகள் திறக்கப்பட உள்ளதை முன்னிட்டு, பழனிசெட்டிபட்டி பேரூராட்சி பகுதியில் உள்ள பழனியப்பா நினைவு தொடக்கப்பள்ளி மற்றும் வீரபாண்டி பேரூராட்சி பகுதியில் உள்ள முத்துத்தேவன்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு அரசின் உத்தரவின்படி, வருகின்ற ஜூன் 4ஆம் தேதி பள்ளிகள் திறக்கப்பட உள்ளதை முன்னிட்டு, பழனிசெட்டிபட்டி பேரூராட்சியில் உள்ள பழனியப்பா நினைவு தொடக்கப்பள்ளி மற்றும் வீரபாண்டி பேரூராட்சியில் உள்ள முத்துத்தேவன்பட்டியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் மாணவர்களுக்கான பாடப்புத்தகங்கள், சீருடைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதையும், மேலும் பள்ளி வகுப்பறைகள், பள்ளி வளாகம் மற்றும் கழிவறைகள் தூய்மையாக உள்ளதா எனவும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, மாணவர்கள் பாதுகாப்பான மற்றும் கற்றலுக்கு ஏற்ற சூழலில் கல்வி பயிலும் வகையில் தேவையான அனைத்து முன்னேற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

முன்னதாக, தேனி அல்லிநகரம் பகுதியில் சிறப்பு துபிர்வாரும் திட்டத்தின் (20262027) கீழ் மந்தைக்குளம் கண்மாய் வரத்து வாய்க்கால் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, தூர்வாரும் பணிகள் தரமான முறையில் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் நிறைவு செய்யப்பட வேண்டும் என சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இவ்வாய்வில், உதவி செயற்பொறியாளர் (மஞ்சளாறு வடிநில உபகோட்டம்) ஜெ.சாலமோன் கிருஸ்துதாஸ், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்.ஏ.எடிசன், உதவிப்பொறியாளர் அரவிந்த் உள்ளிட்ட அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

## கலைஞர் பிறந்த நாள் விழா...தொண்டரணி வண்டவாசி கோவிந்தன் தலைமையில் உணவு பரிமாறப்பட்டது



சிவகங்கை, ஜூன்.4-

சிவகங்கை முதாதமிழறிஞர் டாக்டர் கலைஞரின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு சிவகங்கை திமுக மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளரும் . ஒன்றியக்குழு மேனாள் உறுப்பினருமான வண்டவாசி கோவிந்தன் ஏற்பாட்டில் தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது..வண்டவாசி கோவிந்தன் தலைமையில் சிவகங்கை திமுகவினர் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞரின் திரு உருவப் படத்திற்கு மலர்கள் தூவி மரியாதை செலுத்தினர்... இதனையடுத்து தொடர்ந்து பல ஆண்டுகளாகவே தனது சொந்த செலவில் உணவுப் பொருட்கள் வழங்கி வருவதைப் போல இந்த வருடமும் சிவகங்கை புறநகர் பகுதியில் செயல்பட்டு வரும் தவழும் மாற்றுத் திறனாளிகள் இல்லமான தாய் இல்லத்தில் இனிப்புகள் மற்றும் காலைச் சிற்றுண்டி வழங்கி கொண்டாடினர்...இந்த நிகழ்ச்சியின் போது திமுக மாற்றுத் திறனாளிகள் அணி மாநில இணைச் செயலாளரும் . நியமன நகர்மன்ற உறுப்பினருமான கே.ஜே.டி.மலர்மன்னன் என்ற புஷ்பராஜ் . வழக்கறிஞர் பில்லூர் கார்த்திக் . முரசொலி மதி . கழக மூத்த முன்னோடி சக்கந்தி காஜா மைதீன் . சமத்துவபுரம் கூ.காளிதாஸ் .ஏழுமலை என்ற பொன்னழகு . கழக மூத்த முன்னோடி சங்கையா உள்ளிட்ட ஏராளமான திமுகவினர் கலந்து கொண்டு பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடி மகிழ்ந்த னர்... நிகழ்ச்சி ஏற்பாடுகளை சிவகங்கை திமுக தொண்டரணி மாவட்ட துணை அமைப்பாளரும் . முன்னாள் கவுன்சிலருமான வண்டவாசி கா. கோவிந்தராஜன் சிறப்பாக செய்திருந்தார்...

## ஆற்காடு பேருந்து நிலையத்தில் தமிழக வாழ்வுரிமைக் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!




ராணிப்பேட்டை, ஜூன்.4-

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு பேருந்து நிலையத்தில் மேற்கு மாவட்ட தமிழக வாழ்வுரிமைக் கட்சி சார்பில் காவேரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணைக்கட்ட துடிக்கும் கர்நாடகா அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மேற்கு மாவட்ட செயலாளர் விஸ்வநாதன் தலைமை தாங்கினார்.இதில் மாவட்டத் தலைவர் முகமது காசிம்,விளாப்பாக்கம் நகர செயலாளர் அன்பு, ஆற்காடு ஒன்றிய தலைவர் சேகர், மாவட்ட வழக்கறிஞர் அணி செயலாளர் தினேஷ் குமார், ஆற்காடு ஒன்றிய அமைப்பாளர் சிவசக்தி, நகர தலைவர் வீரப்பன் ,செல்வகுமார்,ராணிப்பேட்டை நகர செயலாளர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆற்காடு நகர செயலாளர் எம்.முருகன் வரவேற்றார். இதில் கண்டன உரையாற்றிய மாநில கொள்கை விளக்க அணி தலைவர் திருவெற்றியூர் மாரிமுத்து காவிரி ஆற்றின் மேகதாதுவில் உச்சநீதிமன்றம் மற்றும் காவேரி மேலாண்மை வாரிய தீர்ப்பையும் மீறி இந்திய ஒன்றிய அரசின் ஒருமைப்பாட்டுக்கு பங்கம் வகிக்கும் வகையில் தமிழர்களின் ஜீவாதாரத்தை கேள்வி குறியாக்கும் வகையிலும் கர்நாடக அரசு காவிரியில் மேகதாதுவில் அணை கட்டுவதை தமிழக வாழ்வு கட்சி தலைவர் வேல்முருகன் ஆணைக்கிணங்க நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம்.இந்த போக்கை கர்நாடக அரசு மாற்றிக் கொள்ள வேண்டும்.இதை புதிதாக பதவி ஏற்றுள்ள தமிழக முதலமைச்சர் விஜய் தன்னுடைய மவுனத்தை கலைத்து வெளிப்படையாக தமிழர்களின் உரிமைகளுக்காக குரல் அவர் ஒலிக்க வேண்டும்.மேலும் அடுத்த கட்ட நடவடிக்கையாக தமிழக அரசு உச்சநீதிமன்றத்தை நாட வேண்டும். அதே போல முதலில் கர்நாடகா அரசுக்கு பயங்கரமான எச்சரிக்கையை தமிழக அரசு விடுவிக்க வேண்டும் ஏனென்றால் அவர்கள் மிக திமிரோடும், ஆணவத்தோடு இதை கட்டியே தீருவோம் என்று பூமி பூஜை போட்டு உள்ளனர்.அதை தமிழ்நாடு அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது ஒரு போதும் தமிழர்கள் ஏற்றுக் கொள்ள முடியாது.நேற்றைக்கு கூட தமிழகத்தில் விவசாயிகள் போராட்டம் நடத்திக் கொண்டுள்ளனர்.அதை காவல்துறை வைத்து தடியடி நடத்தி கலைத்து உள்ளனர்.இந்தப் போக்கு என்பது காங்கிரசுக்கு ஆதரவாக தமிழக அரசு இருக்கிறார்களோ என்ற ஐயப்பாடு இருக்கிறது. ஏனேன்றால் தமிழ்நாட்டில் ஐந்து எம்எல்ஏக்கள் காங்கிரஸ் தயவால் தான் முதல்வர் விஜய் ஆட்சி அமைத்துள்ளார். ஆகையால் தான் முதல்வர் விஜய் அரசியலாக இதை எதிர்க்கவில்லை என்று கூறியுள்ளனர் .எனவே அது இல்லை என்று முதல்வர் விஜய் பத்திரிகையாளர்கள் சந்திப்பில் விளக்கம் கொடுக்க வேண்டும். உடனடியாக கர்நாடக அரசுக்கு முதலில் எச்சரிக்கை கொடுக்க வேண்டும் பின்பு சட்டரீதியாக தடுப்பதற்கான அனைத்து முயற்சிகளை தமிழ்நாடு அரசு எடுக்க வேண்டும்.மேலும் தமிழக முதல்வர் விஜய் வாய்திறக்கவில்லை என்றால் தமிழக வாழ்வுரிமைக் கட்சி அடுத்த கட்ட அனைத்து போராட்டங்களையும் மேற்கொ ள்ளும்,பின்னர்தமிழகத்துக்கு வரும் அனைத்து கர்நாடகா அரசு பேருந்தை சிறைப்பிடி ப்போம் என்று கூறினார்.இதில் மாவட்ட நிர்வாகிகள் சம்பத்,வெங்கடேசன், ரமேஷ் ,குமரன் ,கணியம்பாடி ஒன்றிய மகளிர் அணி பொறுப்பாளர் வேண்டா,முன்னாள் நகர செயலாளர் கோபி உள்பட பலர் கலந்து கொண்டனர்.இறுதியாக மாவட்ட மகளிர் அணி பொறுப்பாளர் விமலா நன்றி கூறினார்.

## பம்மல் தெற்கு பகுதி திமுக சார்பில் மறைந்த முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழா






பம்மல், ஜூன்.4-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் அடுத்த பம்மல் தெற்கு பகுதி திமுக சார்பில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களின் 103வது பிறந்தநாள் விழா பம்மல் மண்டல குழுத் தலைவரும், தெற்கு பகுதி செயலாளருமான வே.கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர். ராஜா கலந்து கொண்டு கழக கொடியேற்றி இனிப்புகள் வழங்கியும், கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினர் இதனை தொடர்ந்து ஏழை, எளிய மக்களுக்கு அன்னதானம் வழங்கி பிறந்தநாள் விழா வெகு விமர்சியாக கொண்டாடபட்டது. பிறந்தநாள் விழாவின் கலைஞர் ஆட்சியின் போது மக்களுக்காக பல்வேறு நலதிட்டங்களை செய்தவர் என்றும் கொண்டுவரபட்ட திட்டங்கள் அனைத்தும் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் செயல்படுத்தி கொண்டிருந்தார் என பம்மல் மண்டல குழுத் தலைவர் வே.கருணாநிதி சிறப்புரையாற்றினார். இதில் மாமன்ற உறுப்பினர்கள் கல்யாணி டில்லி. மதினாபேகம், சத்யா மதியழகன், ரம்யாசத்ய பிரபு. உட்பட தெற்கு பகுதிகழக நிர்வாகிகள் மற்றும் மகளிரணியினர் உட்பட ஏரளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## பெருங்களத்தூர் வடக்கு பகுதி திமுக சார்பில் தலைவர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் முன்னிட்டு 5000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கினார்



தாம்பரம், ஜூன்.4-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர திமுக மற்றும் பெருங்களத்தூர் வடக்கு பகுதி திமுக சார்பில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் முன்னிட்டு மேற்கு தாம்பரம் அண்ணா பேருந்து நிலையம் அருகில் பகுதி கழக செயலாளர் 4வது மண்டல குழுத்தலைவர் டி.காமராஜ் அவர்கள் ஏற்பாட்டில் தாம்பரம் மாநகர கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா கலந்து கொண்டு தலைவர் கலைஞர் திருவுருவ படத்திற்கு மலர் தூவி வணங்கி 5000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கினார். உடன் மேயர் க.வசந்தகுமாரி, 5வது மண்டல குழுத்தலைவர் எஸ்.இந்திரன் மாநில மருத்துவ அணி செயலாளர் கிருத்திகா தேவி மாமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.கோபி, செ.சுரேஷ், ரமணி ஆதிமூலம், பகுதி கழக நிர்வாகிகள் கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகரன், ஜா.ரவிக்குமார், இரா.செல்வகுமார், ஆர்.அகஸ்டின், டி.கே. தாமஸ், ஆர்.செல்வகுமார், இரா.ரத்திணகுமார், இரா. விஜயகுமார், கி.மாறன், சீனிவாசகுமார், பேகம், புவனேஸ்வரி, க.முனுசாமி, எஸ்.வி.தனசேகர், தங்கராஜ், சித்திரம்வாசு, எம்.ரவிகுமார், எம்.ரமேஷ், எஸ்.ரமேஷ், பட்டுராஜன், கணபதி, மா.கன்னியப்பன், பி.காளியப்பன், எம்.சூர்யா, எம்.மதன்குமார், இ.நவீன், ராஜா உள்ளிட்ட மாநகர, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## கலைஞர் 103வது பிறந்தநாள்: மானாமதுரையில் திமுக சார்பில் மரியாதை



மானாமதுரை, ஜூன்.4-

மறைந்த முன்னாள் முதலமைச்சரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் தலைவருமான கலைஞர் மு.கருணாநிதியின் 103வது பிறந்தநாள் இன்று மாநிலம் முழுவதும் கொண்டாடப்பட்டது.அதன் ஒரு பகுதியாக சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், மானாமதுரையில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு நகர் செயலாளர் பொன்னுச்சாமி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.தொடர்ந்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் லதா அண்ணாத்துரை, மானாமதுரை நகர்மன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி, மேற்கு ஒன்றிய செயலாளர் அண்ணாத்துரை, நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் திமுக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு கலைஞருக்கு புகழஞ்சலி செலுத்தினர்.





## முன்னாள் முதல்வர், கலைஞர் கருணாநிதி 103 வது பிறந்தநாளை முன்னிட்டு நன்மங்கலம் ஊராட்சியில் அன்னதானம்

சோழிங்கநல்லூர், ஜூன்.4-

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர், ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர்., உதயநிதி ஸ்டாலின் வழிகாட்டிடுதலின்படி, மாவட்ட கழகச் செயலாளர்.,முன்னாள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மா.சுப்பிரமணியன்,சோழிங்கநல்லூர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், எஸ்.அரவிந்த் ரமேஷ் ஆலோசனைனப்படி,சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட தோமையார் மலை ஒன்றியம், நன்மங்கலம் ஊராட்சியில் கலைஞர் கருணாநிதி 103 வது பிறந்தநாளை முன்னிட்டு நன்மங்கலம் ஊராட்சியில் அன்னதானம் ஒன்றிய செயலாளர்., ஜி வெங்கடேசன் தலைமையில் நன்மங்கலம் ஊராட்சி மன்ற தலைவர், வி. கிரி நிகழ்ச்சி ஏற்பாட்டில் திராவிட முன்னேற்றக் கழகக் கொடியை ஏற்றி கேக் வெட்டி, பொது மக்களுக்கு இனிப்புகள் , அன்னதானம் வழங்கி சிறப்பாக நடைபெற்றது. உடன் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## கிருஷ்ணகிரியில்திமுக சார்பில் கலைஞரின் 103வது பிறந்த நாளையொட்டி1500 பேருக்கு அன்னதானம் மாவட்ட செயலாளர், முன்னாள் எம்எல்ஏ மதியழகன் வழங்கினார்





கிருஷ்ணகிரி, ஜூன்.4-

கிருஷ்ணகிரியில் திமுக சார்பில் கலைஞரின் 103 வது பிறந்த நாளையொட்டி 1500 பேருக்கு அன்னதானம் மாவட்ட செயலாளர் மதியழகன் எம்எல்ஏ., வழங்கினார். கிருஷ்ணகிரியில் ராயக்கோட்டை சாலை அருகில் உள்ள கலைஞர் சிலை அருகில், கிழக்கு மாவட்ட திமுக மற்றும் மேற்கு, கிழக்கு நகர திமுக சார்பில் முன்னாள் முதல்வர் கலைஞரின் 103 வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

இந்த விழாவிற்கு கிருஷ்ணகிரி மாவட்ட திமுக செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் தலைமை வகித்து, கலைஞரின் சிலைக்கு மாலை அணிவித்து, 103 கிலோ எடை கொண்ட கேக் வெட்டி பொதுமக்கள் மற்றும் கட்சியினருக்கு வழங்கினார். தொடர்ந்து 1500 பேருக்கு அன்னதானம் வழங்கி வாழ்த்தி பேசினார். அப்போது அவர் பேசுகையில், முத்தமிழறிஞர் கலைஞர் ஓர் அமுதசுரபி. அவர் தமிழக மக்களுக்காக பல்வேறு திட்டங்களை கொண்டு வந்து தமிழ் மக்கள் சமூக, பொருளாதாரத்தில் வளர்ச்சி அடைய செய்தவர். பெண்களுக்கு சொத்தில் சமஉரிமை, மகளிர் சுய உதவிக்குழுக்கள், விவசாயத்திற்கு இலவச மின்சாரம், இப்படி எண்ணற்ற திட்டங்களை கொண்டு வந்தவர். அவர் வழியில் நமது முதல்வர் தற்போது சிறப்பாக செயல்படுத்தி உலக நாடுகளே போற்றும் தலைவராக உள்ளார் என கூறினார். முன்னதாக விழாவில் பங்கேற்றவர்களை நகர திமுக பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேலுமணி ஆகியோர் வரவேற்றனர்.

இதில், முன்னாள மாவட்ட செயலாளர் செங்குட்டுவன், முன்னாள் எம்பி. வெற்றிச்செல்வன், மாவட்ட அவைத் தலைவர் தட்ரஅள்ளி நாகராஜ், மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசுமூர்த்தி, சந்திரன், மாவட்ட பொருளாளர் கதிரவன், மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் அன்பரசன்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் செந்தில், கிருபாகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் பாலன், சித்ராசந்திரசேகர், நாகராசன், ஒன்றிய செயலாளர்கள் விசி. மகேந்திரன், தனசேகரன், சாந்தமூர்த்தி, சுப்பிரமணி ,மகேந்திரன், ராஜேந்திரன், அறிஞர், நரசிம்மன்,சரவணன், செல்வம், ரஜினிசெல்வம், குமரேசன், குண.வசந்தரசு, பேரூர் செயலாளர்கள் தம்பிதுரை, ஜே கே எஸ் பாபு , வெங்கட்டப்பன், பார்த்தீபன் மற்றும் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டிசிஆர்.தினேஷ்ராஜன், சுனில்குமார், மீன் ஜெயக்குமார் உள்ளிட்ட நகர்மன்ற உறுப்பினர்கள் உள்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

# 100 நாள் யோகா இயக்கம்: நாடு முழுவதும் 4 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்பு!



புதுடெல்லி, ஜூன்.4-

சர்வதேச யோகா தினம் 2026ஐ முன்னிட்டு, ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் மொரார்ஜி தேசாய் தேசிய யோகா நிறுவனம் (MDNIY) மற்றும் ஹபில்ட் (Habuild) நிறுவனம் இணைந்து நாடு தழுவிய டிஜிட்டல் யோகா முன்முயற்சியை முன்னெடுத்து வருகின்றன. இதற்காக இரு அமைப்புகளும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (விஷீஹி) கையெழுத்திட்டுள்ளன.யோகா 365 திட்டத்தின் ஒரு பகுதியாக, மக்கள் தொடர்ந்து 100 நாட்கள் தினசரி யோகா பயிற்சி மேற்கொள்ள ஊக்குவிக்கும் வகையில் கடந்த மார்ச் மாதம் இந்த டிஜிட்டல் யோகா இயக்கம் தொடங்கப்பட்டது. தற்போது வரை 130க்கும் மேற்பட்ட நாடுகள், இந்தியாவின் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 4 லட்சத்திற்கும் அதிகமானோர் இதில் பங்கேற்றுள்ளனர். ஜூன் 21ஆம் தேதி சர்வதேச யோகா தினத்திற்குள் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆயுஷ் அமைச்சகத்தின் யூடியூப் சேனல் மூலம் ஒளிபரப்பப்படும் இந்த பயிற்சிகளில், அன்றாட வாழ்க்கையில் எளிதாக பின்பற்றக்கூடிய யோகா முறைகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. ஹபில்ட் நிறுவனத்தின் இணை நிறுவனர் மற்றும் யோகா பயிற்றுவிப்பாளரான சௌரப் போத்ரா இந்த அமர்வுகளை வழிநடத்தி வருகிறார்.குறுகிய கால உடற்தகுதி இலக்குகளை விட, நீடித்த ஆரோக்கியம், நல்ல பழக்கவழக்கங்கள் மற்றும் விழிப்புணர்வுடன் கூடிய வாழ்க்கை முறையை உருவாக்குவதில் இந்த திட்டம் கவனம் செலுத்துகிறது. அனைவரும் எளிதாக பங்கேற்று தொடர்ந்து யோகா பயிற்சியில் ஈடுபடக்கூடிய வகையில் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. டிஜிட்டல் தளங்கள் மூலம் யோகாவின் பயன்பாட்டை விரிவுபடுத்துவதோடு, முற்காப்பு சுகாதார பராமரிப்பு கலாச்சாரத்தை வலுப்படுத்தும் நோக்கத்தையும் இந்த கூட்டுமுயற்சி கொண்டுள்ளது. சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு, யோகாவை அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாற்றும் முயற்சியாக இந்த திட்டம் பார்க்கப்படுகிறது.

# முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 103வது பிறந்தநாள்: சிவகங்கை அன்னை முதியோர் இல்லத்தில் திமுக வழக்கறிஞர்கள் காலை உணவு வழங்கல்



சிவகங்கை, ஜூன்.4-

தமிழகத்தின் முன்னாள் முதல்வரும், முத்தமிழ் அறிஞருமான டாக்டர் கலைஞர் கருணாநிதியின் 103வது(ஜூன்3) பிறந்தநாளை முன்னிட்டு, திமுக சிவகங்கை மாவட்ட வழக்கறிஞர்கள் சார்பில் சிவகங்கை அன்னை முதியோர் இல்லத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

இதனை முன்னிட்டு, முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள அனைத்து முதியவர்களுக்கும் சிறப்பான காலை உணவு மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டன. மேலும், அங்குள்ள முதியவர்களிடம் வழக்கறிஞர்கள் நேரில் சென்று நலம் விசாரித்து, அவர்களின் ஆசி மற்றும் வாழ்த்துகளைப் பெற்றனர்.இந்நிகழ்ச்சியில் வழக்கறிஞர்கள் ஆர். பிரபாகர், பில்லூர் கார்த்தி, ஆனந்தகுமார், துஷாந்த் பிரதீப் குமார், எம். ராஜ அமுதன், சதீஷ், எம். அழகு, காட்டு ராஜா, சகோ. செல்வராஜன், ஏ.எஸ். செந்தில், கோகுல் பாண்டியன், சுரேஷ் மற்றும் சக்கந்தி காஜா உள்ளிட்டோர் கலந்து கொண்டு முதியவர்களுக்கு உணவு மற்றும் இனிப்புகளை வழங்கினர்.முதியவர்களின் நெகிழ்ச்சியான வரவேற்பும், வாழ்த்துகளும் நிகழ்ச்சிக்கு மேலும் சிறப்பூட்டின. சமூக அக்கறையுடன் நடைபெற்ற இந்நிகழ்வு அப்பகுதி மக்களிடையே பாராட்டைப் பெற்றுள்ளது.

# மறவமங்கலத்தில் ஒசெ யோக.கிருஷ்ணகுமார் தலைமையில் கலைஞர் பிறந்த நாள் விழா.கோதண்டபாணி . வரதராஜன் . தோக்கப்பன் . மனோகரன் . ரமேஷ் சொக்கு பங்கேற்பு



காளையார் கோவில், ஜூன்.4-

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு தமிழகமெங்கும் திமுக சார்பில் மிகவும் சிறப்பாக கொண்டாடி வருகின்றனர்... தமிழ்நாட்டின் நவீன சிற்பி எனப் போற்றப்படும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் பிறந்த தினமான ஜூன் 3 ந்தேதியை ஒவ்வொரு ஆண்டும் திமுகவினர் நலத்திட்ட உதவிகள் . அன்னதானம் . மற்றும் முதியோர் ஏழை எளியோருக்கு காலைச் சிற்றுண்டி. உணவு மற்றும் இனிப்புகள் வழங்கி வெகு விமரிசையாக கொண்டாடுவது வழக்கம்...அந்த வகையில் காளையார்கோவில் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் மறவமங்கலத்தில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்... காளையார்கோவில் தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் யோக.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியின்போது ஒன்றிய துணைச் செயலாளர் தொழிலதிபர் கோலாந்தி கோதண்டபாணி. ஒன்றிய அவைத் தலைவர் வரதராஜன் . மாவட்ட பிரதிநிதி தோக்கப்பன் . கூட்டுறவு சங்க மேனாள் தலைவர் மனோகரன் . ஆகியோர் முன்னிலை வகித்தனர்...அப்போது காளையார்கோவில் தெற்கு ஒன்றிய நிர்வாகிகள் தலைவர் கலைஞர் வாழ்க . தமிழ் வாழ்க . திமுக வெல்க . என முழக்கங்களை எழுப்பி பொதுமக்கள் மற்றும் வியாபார பெருங்குடி மக்களுக்கு இனிப்புகளை வழங்கினர்.. இந்த நிகழ்ச்சியின் போது ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் ரமேஷ் என்ற சொக்கு . ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் நவநீதக்கிருஷ்ணன் . கோபால் . தச்சனேந்தல் விஜயகுமார் . காட்டுராஜா . செந்தாமரை. ரமேஷ் அய்யப்பன். மோகன் . அழகர்சாமி . நாகநாதன் . செந்தில்குமார் . சம்பத் . பிச்சைக்கண்ணு . கோபால் . பிரசாந்த் . கருணாநிதி . சிறியூர் அழகர் உள்ளிட்ட காளையார்கோவில் தெற்கு ஒன்றியக் கழக நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்...





# முன்னாள் முதல்வர், கலைஞர் கருணாநிதி 103 வது பிறந்தநாளை முன்னிட்டு கோவிலம்பாக்கம் ஊராட்சியில் அன்னதானம்

சோழிங்கநல்லூர், ஜூன்.4-

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர், ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர்., உதயநிதி ஸ்டாலின் வழிகாட்டிடுதலின்படி, மாவட்ட கழகச் செயலாளர்.,முன்னாள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மா. சுப்பிரமணியன், சோழிங்கநல்லூர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், எஸ்.அரவிந்த் ரமேஷ் ஆலோசனைப்படி,சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட தோமையார் மலை ஒன்றியம், கோவிலம்பாக்கம் ஊராட்சியில் கலைஞர் கருணாநிதி 103 வது பிறந்தநாளை முன்னிட்டு கோவிலம்பாக்கம் ஊராட்சி சத்யா நகர் மற்றும் சுண்ணாம்பு கொளத்தூரில் அன்னதானம் முன்னாள், ஊராட்சி மன்ற தலைவர், எ. ரங்கநாதன் மற்றும் மாவட்ட பிரதிநிதி.,5வது வார்டு கவுன்சிலர், ர. சொக்கலிங்கம்நிகழ்ச்சி ஏற்பாட்டில் திராவிட முன்னேற்றக் கழகக் கொடியை ஏற்றி கேக் வெட்டி, பொது மக்களுக்கு இனிப்புகள் , அன்னதானம் இட்லி, சிக்கன் கிரேவி வழங்கி சிறப்பாக நடைபெற்றது. உடன் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# கலைஞர் 103வது பிறந்தநாள் விழா: 500 பேருக்கு தென்னை கன்றுகள் வழங்கல்

கிருஷ்ணகிரி, ஜூன்.4-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினத்தில் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களின் 103 வது பிறந்தநாள் விழா திமுக சார்பில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. ஒன்றிய செயலாளர்கள் தேங்காய் சுப்ரமணி, மகேந்திரன், சரவணன் மற்றும் நகர செயலாளர் ஜே.கே.எஸ். பாபு ஆகியோர் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். தொடர்ந்து கேக் வெட்டி பிறந்தநாளை கொண்டாடியதுடன், 500 பொதுமக்களுக்கு தென்னை கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் பேரூராட்சித் தலைவர் அம்சவேணி செந்தில்குமார், திமுக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# மாணவிக்கு பாலியல் தொல்லை காவலர் அதிரடி கைது

தென்காசி, ஜூன்.4-

சங்கரன்கோவில் அருகே சிவகிரியில் மாணவிக்கு பாலியல் தொல்லை அளித்தாக எழுந்த புகாரில் காவலர் கைது செய்யப்பட்டிருக்கிறார். ஆவடி சிறப்பு படைப்பிரிவில் காவலராக பணியாற்றிய விஜயகுமாரை மகளிர் போலீசார் கைது செய்தனர்.தென்காசி மாவட்டம் சிவகிரியில் கோவில் திருவிழாவில் காவலர் விஜயகுமார் அப்பகுதி மாணவிக்கு பாலியல் தொல்லை தந்தாக புளியங்குடியில் உள்ள அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டிருகிறது. அதன் அடிப்படையில் விசாரணை மேற்கொண்ட அனைத்து மகளிர் காவல் துறையினர் காவலர் விஜயகுமார் என்பவரை கைது செய்தனர்.புளியங்குடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவலர் விஜயகுமார் மீது போக்ஸோ வழக்கு பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர். மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த புகாரில் காவலர் கைது செய்யப்பட்டுள்ளது பரபரப்பை அப்பகுதியில் ஏற்படுத்தியுள்ளது






# சிவகங்கை மேற்கு திமுக சார்பில் கலைஞர் பிறந்த நாள் கொண்டாடப்பட்டது



சிவகங்கை, ஜூன்.4-

சிவகங்கை மேற்கு ஒன்றிய திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞரின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு சிவகங்கை புறநகர் பகுதியான காமராஜர் நகர் அன்னை முதியோர் இல்லத்தில் இனிப்புகள் மற்றும் காலைச் சிற்றுண்டி வழங்கி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது...முன்னதாக சிவகங்கை மேற்கு ஒன்றியம் கண்டாங்கிபட்டியில் மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் கண்டாங்கிபட்டி பெ.மந்தக்காளை தலைமையில் சிறப்பு பொங்கல் வைத்து பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது...இந்த நிகழ்ச்சியின் போது சிவகங்கை யூனியன் மேனாள் சேர்மன் . மாவட்ட பிரதிநிதி தமறாக்கி தெற்கு முத்துராமலிங்கம் அம்பலகாரர் . மேற்கு ஒன்றிய திமுக பொருளாளர் . அரசு ஒப்பந்ததாரர் அர.உசிலம்பட்டி பாண்டியராஜா . மாவட்ட திமுக மகளிரணி அமைப்பாளர் பவானி கணேசன் . ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் திரவியம் . ஒன்றிய ஐடி விங் அமைப்பாளர் தமறாக்கி அம்பலம் . மகளிரணி தமறாக்கி புவனேஸ்வரி . கழக மூத்த முன்னோடி சமத்துவபுரம் சமயத்துரை. உள் ளிட்ட ஏராளமான திமுகவினர் கலந்து கொண்டு கலைஞர் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடி மகிழ்ந்தனர்...

# நாட்டரசன்கோட்டையில் அன்னதானம் வழங்கி கலைஞர் பிறந்த நாள் விழா கோலாந்தி கோதண்டபாணி ஏற்பாடு



காளையார்கோவில், ஜூன்.4-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் தெற்கு ஒன்றிய திமுக துணைச் செயலாளரும் பிரபல தொழிலதிபருமான கோலாந்தி ஆர்.கோதண்டபாணி ஒவ்வொரு வருடமும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் . முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் . உதயநிதி ஸ்டாலின் முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் ஆகியோரது பிறந்த நாளை முன்னிட்டு நாட்டரசன் கோட்டை அருள்மிகு கண்ணுடைய நாயகி அம்மன் கோவிலில் அன்னதான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்வதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்...அந்த வகையில் இந்த வருடம் தானைத்தலைவர் டாக்டர் கலைஞரின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அறுசுவை சைவ உணவு அன்னதானமாக வழங்கினார்..நாட்டரசன் கோட்டை பேரூர்க்கழக திமுக செயலாளர் ஜெயராமன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியின் போது கிளைக் கழக செயலாளர் ஆர்.வி.எஸ்.அரங்கநாதன் . காளையார்கோவில் தெற்கு ஒன்றிய திமுக மாணவரணி அமைப்பாளர் ரமேஷ் என்ற சொக்கு உள்ளிட்ட திமுக வினர் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்...நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோலாந்தி கோதண்டபாணி சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்...

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161